S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு ஜனவரி 18 * 2026 * மலர் -1 * இதழ்-229* VOL-1 * ISSUE-229 விலை ரூ.3 * பக்கம் -4

## உலகப்புகழ் வாய்ந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு:

# முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து நேரில் பார்த்து ரசித்தார்!

அலங்காநல்லூர்,ஜன.18–

தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக் கட்டு போட்டி நேற்று காலை 7 மணிக்கு தொடங்கியது.1153க்கும் மேற்பட்ட காளைகள், 933மாடு பிடி வீரர்கள் பங்கேற்றனர் .தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பார் வையிட்டார். 3450 காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரு கின்றனர்.

மதுரை மாவட்டம் அலங்காநல் லூரில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு உலகப்புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை நேற்று காலை 7 மணிக்கு வணிகவரி மற் றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி உறுதிமொழி ஏற்புடன் பச்சை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஆட்சியர் பிர வீன் குமார், சோழவந்தான் எம். எல்.ஏ வெங்கடேசன்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் மற்றும் அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், எம்.எல்.ஏக் கள், காவல்துறை அதிகாரிகள், வரு வாய்த்துறையினர், தீயணைப்பு துறையினர் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டார்.மேலும் தமிழக முதல் வர் மு. க ஸ்டாலின் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

மதுரை தென்மண்டல ஐ.ஜி விஜ யேந்திர பிடாரி தலைமையில் பாது காப்பு பணிக்காக 3450 க்கும் மேற் பட்ட காவல்துறையினர், ஊர்க்காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். முன்ன தாக வீரர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டவுடன் தொடங்கிய இப் போட்டியில் 1153க்கும் மேற்பட்ட காளைகள், 933மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

வாடி வாசலுக்கு வந்த வீரர்கள் ஒரு சுற்றுக்கு 50 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர் காளைகள் வாடிவாசலில் இருந்து வெளியேறி யவுடன் பிடிக்க வந்த வீரர்களை துரத்திச் சென்று மிரட்டியது பார் வையாளர்களை உற்சாகப்படுத்தி யது.

பல காளைகளை பிடிக்க வந்த வீரர்களை மிரட்டி யதில் அவர்கள் தப்பிச்சென்று தடுப்பு வேலியில் ஏறி நின்றனர்.

நன்கு பழக்கப்பட்ட மாடுகள் வீரர்களுக்கு விளையாட்டு காட்டி யது. அலங்காநல்லூரில் மாடுகளின் விளையா ட்டையும் வீரர்களின் வீர த்தை உற்சாகப்படுத்தும் வகையில் பொதுமக்கள் ஆரவாரத்துடன் கைதட்டி பாராட்டினர். இந்த நிகழ்ச் சியை காண ஏராளமான வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் அலங்கா நல்லூர் வந்திருந்தனர்.



அலங்காநல்லூரில் நடந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் காளையை அடக்கிய வீரருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தங்க மோதிரம் வழங்கினார்.

போட்டியில் சிறப்பாக விளையா டியசிறந்தமாடுபிடிவீரர்,காளைக்கு டிராக்டர், கார் பரிசாக வழங்கப்பட வுள்ளது. இதேபோன்று போட்டி யில் வெற்றி பெறும் காளை கள்,மாடுபிடி வீரர்களுக்கு பைக், தங்ககாசு, சைக் கிள்,மெத்தை,ரொக்க பணம் உள் ளிட்ட பல்வேறு பரிசுகளும் வழங் கப்படவுள்ளன. போட்டி முழுவதிலும் சிசிடிவி கேமிரா மூலம் கண்காணிக்கப்படுகிறது.

ஆன்லைன் மூலமாக பதிவுசெய் யப்பட்ட காளைகள் மற்றும் மாடு பிடி வீரர்களுக்கு போட்டியில் கலந் துகொள்வதற்கு முன்பாக மருத்துவபரிசோதனை செய்யப் பட்ட பின்னரே ஒவ்வொரு சுற்றாக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். போட்டியின் போது மாடுபிடி வீரர் ஆள்மாறாட்டத்தைதடுக்கும் வகை யில் வீரர்களை கண்காணிக்க சிறப் புகுழு அமைக்கப்பட்டு போட்டி யில் கலந்துகொள்ள போலியான ஆவணங்களை பயன்படுத்தி காளை உரிமையாளரோ, மாடுபிடி வீரர்களோ கலந்துகொண்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப் படும் என காவல்துறையினர் தரப் பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கு வரும் காளைகளை அழைத்துவரும் வாகனங்களில் போட்டிக்கான அனுமதி சீட்டு இருந்தால் மட்டுமே சோதனைசாவ டிகளில் அனுமதிக்கப்படும் என காவல்துறையினர் தெரிவித்துள்ள னர். போட்டியில் காளைகள் டோக் கன் வரிசைப்படி அவிழ்த்துவிடுவ தற்கான பணிகள் நடைபெற்றுவருகிறது.

போட்டியின் போது 1கிலோமீட் டர்தூரத்திற்கும் மேல்தடுப்பு வேலி கள் அமைக்கப்பட்டு வாடிவாசல் முன்பு வீரர்கள் மற்றும் காளைக ளுக்கு காய ங்கள் ஏதும் ஏற்படாத வாறு தேங்காய் நார் பரப்பபட்டுள் ளது.

காளைக்களுக்கான கலெக்சன் பாயிண்டில் உடைப்பு ஏற்படாத வாறு இரண்டடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் போட்டி நடைபெறும் அலங்காநல்லூர் பகுதிகளை சுற்றி யுள்ள கிணறுகளில் காளைகள் உள்ளே விழுந்து காயம் ஏற்பட்டுவி டக்கூடாது என்பதற்காக கிணறுகளில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த போட்டியை காண்பதற்காக வெளி நாடுகள் மற்றும் வெளி மாநிலங்க ளில் இருந்து சுற்றுலா பயணிகள் பார்வையிடுவதற்காக தனி பார்வை யாளர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இந்த போட்டிக்காக மருத்துவர் கள் மற்றும் செவிலியர்கள் என 120 பேர் கொண்ட மருத்துவக்குழுவின ரும்,108 ஆம்புலன்ஸ்கள் 11ம் ,100 பேர் கொண்ட கால்நடை மருத்து வக் குழுவினரும், கால்நடைக்கான ஆம்புலன்ஸ் 2ம் மற்றும் 100 பேர் கொண்ட தீயணைப்பு துறையினரும்,4 தீயணைப்பு வாக னங்களும்நிறுத்திவைக்கப்பட்டுள் ளன. மேலும் ஜல்லிக்கட்டு போட் டியைகாணவரும்பொதுமக்களுக்கு அலங்காநல்லூர் பேரூராட்சி சார் பில் குடிநீர், கழிப்பிடம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்த காளைகள்; துணிச்சலுடன் அடக்கிய வீரர்கள்











தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், வழங்கினார்.உடன் முன்னாள் படைவீரர் நலன் உதவி இயக்குநர் (பொ)பிரேமா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கலந்துகொண்டனர்.



# கூடங்குளத்தில் பொங்கல் விளையாட்டு விழாவினை முன்னாள் எம்.பி. சௌந்தர்ராஜன் துவக்கி வைத்தார்!

நெல்லை, ஜன.18

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் சுவாமி விவேகானந்த மன்றம் சார்பில் 52 வது ஆண்டு பொங்கல் விளையாட்டு விழாவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பல்கலைக்கழக கபடி வீரரும் அதிமுக நெல்லை மாவட்ட பொருளாளருமான சௌந்தர்ராஜன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். முன்னதாக பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.தொடர்ந்து அங்கு வந்திருந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே பேசிய சௌந்தரராஜன்

விளையாட்டு என்பது உண்மையிலேயே சொல்லப்போனால் அது விளையாட்டு அல்ல. விளையாட்டு என்பது ஒரு மனதிற்கு ஊக்கமும், ஆற்றலும், தைரியமும், தன்னம்பிக்கையும் தருகின்ற மிகப் பெரிய ஒன்றுதான் விளையாட்டு உலகம். நாம் விளையாட்டாக சில கருத்துக்களை சொல்லுவோம். ஆனால் உண்மையிலேயே விளையாடுபவர்களுக்குத்தான் தெரியும் அதில் இருக்கின்ற கஷ்டங்கள். விளையாட்டில் மட்டும்தான் விளையாட்டு வீரர்களுக்கு மட்டும்தான் சொல்லுவது வெற்றியும், தோல்வியும் வீரனுக்கு அழகு என்று சொல்லுகின்ற ஒரே இடம் விளையாட்டில் மட்டும்தான் எனவும் பேசினார்.இந்த நிகழ்வில் அவருடன் அதிமுக நிர்வாகிகள் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோணி அமலராஜா, திருநெல்வேலி புறநகர் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் சுரேஷ்குமார்,

ராதாபுரம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் தலைவர், செல்வராஜேஷ், மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை துணை தலைவர் குமரேசன், சுவாமி விவேகானந்ததா மன்றதலைவர்பிரதிப்மற்றும்நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## ஆம்பூர் நகரமன்ற கூட்டத்தில்

# ரூ.5 கோடி மதிப்பில் திட்ட பணிகளுக்கான 77 தீர்மானங்கள் நிறைவேற்றம்!

ஆம்பூர்.ஜன.18

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகர மன்ற சாதாரண கூட்டம் மன்ற அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகரமன்ற தலைவர் பி. ஏஜாஸ் அஹமத் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையாளர் முத்துசாமி, நகர அமைப்பு ஆய்வாளர் அலுமேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுகாதார ஆய்வாளர் அருள் செல்வதாஸ் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் வரவு செலவு மற்றும் ரூபாய் 5 கோடி மதிப்பில் திட்ட பணிகளுக்கான மொத்தம் 77 தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து மன்ற உறுப்பினர்கள் வார்டு பகுதியில் நிலவும் பிரச்சனை மற்றும் கோரிக்கைகள் குறித்து பேசினர்.

அப்போது 5 வது வார்டு உறுப்பினர் வசந்த் பேசுவையில்:

கஸ்பா ஏ பகுதியில் உள்ள இடுகாடு பகுதிக்கு உயர் கோபுர மின் விளக்கு தேவைபடுகிறது. அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலாற்றில் குப்பை கொட்டுவது தடுத்து நிறுத்த வேண்டும். குப்பை கொட்டுவது நகராட்சி தடுக்க தவறும் பட்சத்தில் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும். 21 வார்டு உறுப்பினர் நபீஸ் ரஹ்மான் பேசுகையில்:

வார்டு பகுதியில் சில இடங்களில் சாலை அமைப்பிக்கப்படவில்லை, அமைத்து தர வேண்டும். தெரு நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் இடையில் கெட்ட பெயர் ஏற்பட்டு வருகிறது. வார்டு பகுதிக்கு தேவையான பணி மேற்கொள்ள வேண்டும் என்று பேசினார்.

4 வது வார்டு உறுப்பினர் நிஹாத் அஹமத் பேசுகையில்

வார்டு பகுதியில் உள்ள பெரிய கால்வாய் தூர் வரவேண்டும். நாய் தொல்லைகள் கட்டுப்படுத்த வேண்டும். 6 மாதமாக வரி போடவில்லை. ஒரு மாதமாக கம்பத்தில் தெரு விளக்கு எரியவில்லை.சரி செய்ய வேண்டும்.

10 வது வார்டு உறுப்பினர் இம்தியாஸ் அஹமத் பேசுகையில்:

வார்டு பகுதியில் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதில் வெள்ளை கோடு அமைத்து தர வேண்டும்.

நகராட்சி பூங்கா பராமரிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அங்கே குழந்தைகள் விளையாட எந்த உபகரணங்களும் இல்லை.

34 வது வார்டு உறுப்பினர் தனபாகியம் பேசுகையில்:

எம்.வி சாமிநாதன் தெருவில் டாஸ்மாக் கடை அமைந்துள்ளது. அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

25 வது வார்டு உறுப்பினர் நூல்லா பேசுகையில்:

வார்டு பகுதியில் சரிவர குப்பை அள்ளுவதில்லை, கால்வாய் தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை தொடர்ந்து மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகரமன்ற தலைவர் தலைவர் ஏஜாஸ் அஹ்மத் பதிலளித்தார்.

கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகராட்சி மேலாளர் தாமோதரன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை அருகே 12 ஆண்டுகளாக

# மகளுக்கு பொங்கல் சீர் 17 கி.மீ.தூரம் சைக்கிள் ஓட்டிச்சென்று வழங்கிய முதியவர்!



புதுக்கோட்டை.ஜன.18

.தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட் டு தமிழர்களின் பாரம்பரியத்துடன் 82 வயதுடைய தந் தையான புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வடக்கு கொத்தக் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை ( 82) இவர் 12வது ஆண்டாக இந்தாண்டும் தனது பாசமகளுக் கு 5 கரும்புகளை தலையில் வைத்துக்கொண்டு பொங் கல் சீரை சுமார் 17 கிலோ மீட்டர் தூரம் 16 வேகத்தடைகளை கடந்து சைக்கிளிலே யே கொண்டு செல்வது அ னைவரையும் வியக்க வைத்துள்ளது. தமிழர்களின் திருநாளாம் பொங்கல் பண்டிகையை மு ன்னிட்டு தமிழர்களின் பாரம்பரியமும் கலாச்சாரமுமாக உள்ள பொங்கல் சீர் கொடுக்கும் நிகழ்ச்சி பல்வேறு பகு திகளிலும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பெண் பிள்ளைகளை திருமணம் செய்து கொடுப்பவர்கள் வீட்டிற்கு பெண் வீட்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையின் போது அவரவர் வசதிக்கேற்ப பொங்கல் சீர் வழங்குவது தமி ழர்களின் வாடிக்கையாக உள்ளது புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வடக்கு கொத்தக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் செல் லத்துரை (82). இவரது மனைவி அமிர்த வள்ளி. இவர்க ளுக்கு சுந்தராம்பாள் என்ற மகளும் முருகேசன் என்ற மகனும் உள்ளனர்.

இந்நிலையில் சுந்தராம்பாளை சுமார் 24 ஆண்டுகளுக் கு முன்பு நம்பம்பட்டியில் திருமணம் செய்து கொடுத்த நிலையில் அவருக்கு 12 ஆண்டுகளாக குழந்தை இல் லாமல் இருந்துள்ளது.

பின்னர் 12 ஆண்டுகளுக்குப் பிறகு சுந்தரம்பாளுக்கு இரட்டை குழந்தை பிறந்தள்ளது. அதற்கு முன்பு வரை ஆயிரம் ரூபாய் பொங்கல் சீராக கொடுத்து வந்தனர். தன் மகளுக்கு குழந்தை பிறந்த தினம் முதல் நேற்று தினம் வரை தொடர்ச்சியாக 12 ஆண்டு காலமாக பார ம்பரியமும் கலாச்சாரமும் மாறாமல் இருக்கவும் மகள் மீது கொண்ட பாசத்தாலும் ஒவ்வொரு ஆண்டும் பொங் கல் பண்டிகையின் போது பொங்கல் சீர் வழங்கி வருகிறார்.குறிப்பாக இவர் 82 வயதிலையும் அவரது சைக்கிளில் விவேகானந்தர் காலண்டர் தேங்காய் பழம் மஞ்சள் கொத்து வேட்டி துண்டு பொங்கல் பூ பச்சரிசி வெள்ளம் கா ய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொங்கல் சீரை வைத்துக்கொண்டு ஐந்து கரும்புகளை தலையில் சுமந்து கொண்டு கரும்பை கையில் வைத்து பிடிக்கா மல் அவரது சைக்கிளை ஓட்டி சென்று வருகிறார்.

வடக்கு கொத்தக்கோட்டை பகுதியிலிருந்து சுமார் 17 கிலோ மீட்டர் தூரம் 16 வேகத் தடைகளை கடந்து நம்ப ம்பட்டி வரை சைக்கிளிலேயே அவர் பொங்கல் சீர் கொ ண்டு செல்வதை சாலை நெடுகிலும் உள்ள மக்கள் கண் டு வியந்து வருவதோடு கைகளை காட்டி பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.



நெல்லை மாவட்டம் திசையன்விளை காவல் நிலையத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் சிறப்பு விருந்தினராக வள்ளியூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் வெங்கடேஷ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.நிகழ்வில் திசையன்விளை காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் ஆண்டோபிரதீப்,அனிஷ்,ராமநாதன் காவலர்கள் மற்றும் காவல்துறையினரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினர்.



## பாலக்கோடு பேரூராட்சியில்

# இஸ்லாமியருடன் சமத்துவ பொங்கல் விழா!

பாலக்கோடு, ஜன.18

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சியில் சமத்துவ பொங்கல் விழா பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு செயல் அலுவலர் இந்துமதி, துணைத்தலைவர், திமுக மேற்கு மாவட்ட பொருளாளர் எம்.எம்.முருகன், விவசாய அணி மாநில துணை செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபாட் ரங்கதுரை, நகர அவைத் தலைவர் அமானுல்லா,

தாஹசீனாஇதாயத்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி வளாகத்தில் வண்ண கோலமிட்டு கரும்பு, வாழை, மஞ்சளுடன் புதுப்பாணையில் பொங்கலிட்டு பொங்கலோ , பொங்கலோ என்று ஆராவரத்துடன் தமிழர் பாரம்பரிய முறைப்படி பொங்கல் வைத்து இஸ்லாமியர் மற்றும் தூய்மை பணியாளர்களுடன் , சமத்துவ பொங்கல் விழா கொண்டாடினர்.

அதனை தொடர்ந்து பேரூராட்சி வளாக்கத்தில் உரி அடித்தல், கயிறு இழுத்தல், கோலப்போட்டி உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது, இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி பரிசுகளை வழங்கினார்.

அனைவருக்கும் இனிப்பு பொங்கல் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள், அலுவலக ஊழியர்கள், தூய்மை காவலர்கள், திமுக நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.






# தாராபுரத்தில் நடிகர் சூர்யா நற்பணி இயக்கத்தினர் பக்தர்களுக்கு ஒளிரும் பட்டை வழங்கினர்!

தாராபுரம், ஜன.18

திருப்பூர் தெற்கு மாவட்டம் சூர்யா நற்பணி இயக்கம் இளைஞரணி சார்பில் தாராபுரத்தில் போக்குவரத்து காவல் துறையுடன் சேர்ந்து தாராபுரம் வழியாக பழனிக்கு தைப்பூசம் பாதயாத்திரை செல்லும் சுமார் 1000'திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு இரவு நேரத்தில் பாதுகாப்பாக செல்ல ஒளிரும்பட்டை வழங்கப்பட்டது,

இந்நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர் குகன் தலைமையில் நடைபெற்றது உடன் தாராபுரம் வட்டார போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் சாஜினி மற்றும் சூர்யா நற்பணி இயக்க உறுப்பினர்கள் மணிகண்டன், பிரவீன்,பிரணீஷ், சரவணன், அஜய், கபிலன், தன்வின், ஆனந்த், புகழ் மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



## நெல்லை கிழக்கு மாவட்ட

# தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் விழா கொண்டாட்டம்!

நெல்லை, ஜன.18

நெல்லை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வள்ளியூரில் திராவிட சமத்துவ பொங்கல் விழா நடந்தது. விழாவில் நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல், முன்னாள் எம்பி ஞானதிரவியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.பொங்கல் விழாவில் மும்மத தலைவர்கள் முன்னிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பொங்கலுக்கு வழிபாடு நடத்தினர். தொடர்ந்து உறியடி,வடமிழுத்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. விழாவின் சிறப்பாக மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல் முன்னாள் எம்.பி ஞானதிரவியம் சிலம்பம் சுற்றி விளையாடியது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. முன்னதாக விழாவிற்கு மாவட்ட பொறுப்பாளர் கிரகாம்பெல் மாட்டு வண்டியில் ஊர்வலமாக ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் மேளதாளம், கரகாட்டம் சிலம்பாட்டம் ஒயிலாட்டம் போன்ற தமிழர் பாரம்பரிய கலாச்சாரப்படி வரவேற்பளித்தனர். இதில் நெல்லை கிழக்கு மாவட்ட, ஒன்றிய,நகர கிளை திமுக நிர்வாகிகள்,உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## வாணியம்பாடி ரயில் நிலையத்தில்

# தாண்டவாளங்களை கடந்து செல்லும் பயணிகளை நிறுத்தி ரயில்வே போலீசார் விழிப்புணர்வு!

வாணியம்பாடி, ஜன.18

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ரயில் நிலையத்தில் ஜோலார்ப்பேட்டை உள்ள ரயில்வே பாதுகாப்புப் படை ஆய்வாளர் ஸ்ரீ நிகில் குமார் குப்தா தலைமையிலான போலீசார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அப்போது தாண்டவலங்களை கடந்து செல்லும் பயணிகள் மற்றும் நடைமேடையில் நிற்கும் பயணிகள் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளை அழைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.அப்போதுஉங்கள்உயிர்விலைமதிப்பற்றது எனவே தண்டவாளங்கள் கடக்காமல் ரயில் நிலையத்தில் உள்ள நடைமேடை பாலத்தைப் பயன்படுத்த வேண்டும், மூடிய நிலையில் உள்ள லெவல் கிராசிங்கில் நுழைய வேண்டாம், ரயில்களில் கல் எறிவதைத் தவிர்க்க வேண்டும், ரயில்களில் படிக்களில் அமர்ந்து பயணிப்பதும் புகைப்படம், வீடியோ எடுப்பதை தவிர்க்க வேண்டும், ரயிலுக்கு அருகில் ரீல்கள் செய்வதைத் தவிர்க்கவும். மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயணிகளுக்கு அறிவுரை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## ஈரோடு 39வது வார்டில் சமத்துவ பொங்கல் விழா: மாநகராட்சி ஆணையாளர் பங்கேற்பு!

ஈரோடு, ஜன.18

ஈரோடு மாநகராட்சி நான்காம் மண்டலத்தின் சார்பில், 39வது வார்டில் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐ.ஏ.எஸ்.,அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவினைத் தொடங்கி வைத்தார். மண்டலத் தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், மகளிர் பாரம்பரிய முறைப்படி பொங்கலிட்டு விழாவைக் கொண்டாடினர். இவ்விழாவிற்கு நான்காம் மண்டலத் தலைவர் குறிஞ்சி என். தண்டபாணி தலைமைதாங்கினார். நான்காம் மண்டல உதவி ஆணையாளர் லதா, 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், தி.மு.க. முக்கியப் பிரமுகர் கேபிள் செந்தில்குமார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள், தூய்மைப் பணியாளர்கள் என ஏராளமானோர் இந்தச் சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்டனர்.

உற்சாகக் கொண்டாட்டம்:

ஆணையாளர் மற்றும் மண்டலத் தலைவர் ஆகியோர் பொதுமக்களுக்குப் பொங்கல் மற்றும் இனிப்புகளை வழங்கி வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். மாநகராட்சி நிர்வாகமும் மக்களும் இணைந்து கொண்டாடிய இந்த விழா அப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.



### வாணியம்பாடியில் பொங்கல் விழாவை முன்னிட்டு

## பெண்கள் 350 பேருக்கு இலவச பட்டு புடவைகளை தி.மு.க. நகரத் துணைச் செயலாளர் தென்னரசு வழங்கினார்!

வாணியம்பாடி, ஜன.18

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோவிந்தாபுரம் பகுதியில் பொங்கல் விழாவை முன்னிட்டு 350 பெண்களுக்கு இலவச பட்டுப்புடவை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் நகரமன்ற உறுப்பினரும் திமுக நகரத் துணைச் செயலாளருமான கே.தென்னரசு தலைமை வகித்தார். ஊர் நாட்டாண்மை சி.சந்திரன் அனைவரையும் வரவேற்றார். இதில் வார்டு உறுப்பினர் சித்ரா தென்னரசு கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியை தொடர்ந்து வார்டு பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கு திமுக நகர துணைச் செயலாளர் கே.தென்னரசு நேரில் சென்று குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு என 350 பெண்களுக்கு இலவசமாக பட்டு புடவை வழங்கி பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்தார்.

அப்போது பி.எல் 2 எஸ்.சந்திரன், ஐ.டி விங் அஜய் குமார், பி.எல்.சி ராகுல், அவைத் தலைவர் ஸ்டாலின், பொருளாளர் எம்.சுந்தர் மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.



## புதுக்கோட்டை அருகே பல தலைமுறைக்கு முன் இறந்த சிறுமி கொப்பியம்மாளுக்கு வினோத விழா!

புதுக்கோட்டை,ஜன.18

புதுக்கோட்டைஅருகே பல தலைமுறைக்கு முன் இறந்த சிறுமி கொப்பியம்மாளுக்கு வினோத திருவிழா அப்ப குதியில் பெண்கள் பெண் குழந்தைகளோடு நடைபெற்றது.பல தலைமுறைகளுக்கு முன்பாக இறந்த சிறுமியின் நினைவாக ஒரு கிராம மக்கள் விநோத பொங்கல் விழா நடத்தி வழிபாட்டில் ஈடுபட்டது காண்போரை கவர்ந்தது. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள செரி யலூர் கிராமம் உள்ளது.இந்த கிராமத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கொப்பியம்மாள் என்ற சிறுமி அம் மை நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாகவும், அந்த சிறுமியின் உடல் அக்கிராமத்தின் எல்லையிலுள் ள தீர்த்தானிக்கரை குளக்கரையில் புதைக்கப்பட்டதாக கவும், அதன்பின் அந்த கிராமத்தில் யாரும் அம்மை நோயால் உயிர் இழக்கக்கூடாது என்பதற்காக அந்த கிராம மக்கள் பல தலைமுறைகளாக தொன்று தொட்டு ஒரு வினோத பொங்கல் விழாவை கொண்டாடி வருகின்ற னர்.

பொங்கல் விழாவில் பெண்கள் ஒன்று கூடி மிக சிறப்பா க கொண்டாடப்படும் விழாவில் மரத்தடியில் கிராமம் ஒ ன்று கூடி கொப்பி கொட்டல் விழா எடுத்து சாமி தரிசன ம் செய்து அம்மரத்தை சுற்றி மீண்டும் கொப்பி எடுத்துக் கொண்டு தாளம் மேள தாலங்கள் முழங்க வானவேடிக் கை அதிர அருகே உள்ள செரியலூர் ஊராட்சி பிள்ளையார் கோவில் குளக்கரையில் பெண்கள் ஒன்றுகூடிகொ ட்டி கழிப்பது பெண்களின் வினோத விழாவாகும். கிராமத்தில் பிறந்த பெண் குழந்தைகள் பருவம் எய்து வதற்கு முன்பு இந்த திருவிழாவில் கலந்து கொள்ள வே ண்டும் பிறந்த சிறு குழந்தைகள் இருக்கும் வீட்டில் குழ ந்தைகளின் தாய் அல்லது சகோதரிகள் கலந்து கொள் வார்கள்.

திருவிழாவில் பங்கேற்கும் குழந்தைகள் பெண்கள் திரு விழா முடியும் வரை விரதமிருந்து கலந்துகொள்ள வே ண்டும்.செரியலூர் கிராமத்தில் பெண் குழந்தைகள் உ ள்ள வீட்டில் காலையில் வெற்று பொங்கல் வைத்து மூ ன்று படையல் வைத்து ஒரு ஓலை கூடையில் இரு பெரி ய சாணிப்பிள்ளையார் அதனுடன் 92 சிறு பிள்ளையார்கள் செய்து வைப்பர். அதில் கூழைப்பூ ஆவாரம்பூ, அருகம்புல், வேப்பிலை, கரும்பு வெல்லம் ஆகியவற்றை வைத்து கிராமத்தின் உள்ள பாலை மரத்தடியில் கிராமத்தில் அனைவரும் ஒன்றுகூடி பெண்கள் பெண் குழந்தைகள் தனித்தனி யாக கும்மியடித்து வழிபாடு செய்து அணிவகுத்து தீர்த்தான் ஊரணிவரை கொண்டு செல்வார். அங்கு கூடையில் உள்ள கூடைகளை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டு மற்ற பொருட்களை குழியில் புதைத் து விட்டு ஒரு சிறு பிள்ளையாரை அருகில் உள்ள ராக்காச்சி அம்மன் கோயில் காட்டில் வைத்து வழிபடுவர்.இந்த விழாவை கொப்பி திருவிழாஎன்று இப்பகுதி மக்கள்கூறுகின்றனர்.

## திருச்செந்தூரில் வாலிபர் கொடூர கொலை: பக்கத்து வீட்டுக்காரர் கைது!

தூத்துக்குடி ஜன .18

திருச்செந்தூரில் மின் கட்டணம் தொடர்பாக ஏற்பட்ட தகராறில் வாலிபரை கொடூரமாக கொலை செய்த பக்கத்து வீட்டுக்காரரை போலீசார் கைது செய்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வண்டிக்கார தெருவைச் சேர்ந்தவர் ஏழுமலை வாசன் கூலி வேலை செய்து வருகிறார். இவரது பக்கத்து வீட்டில் வசிப்பவர்; இசக்கி ராஜா இவர்கள் இருவரும் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். 2 பேர் வீட்டுக்கும் ஒரே மின் இணைப்பு என்பதால் 2 பேரும் மின் கட்டணத்தை பகிர்ந்து கட்டுவார்களாம். இந்த நிலையில் மின் கட்டணம் கட்டுவதற்காக ஏழுமலை வாசன், இசக்கி ராஜாவிடம் பணம் கேட்டாராம். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதில் ஏழுமலை வாசன் இசக்கி ராஜா வீட்டுக்கு செல்லும் மின் இணைப்பை துண்டித்து விட்டாராம். இதையடுத்து இன்று இசக்கிராஜா மின் இணைப்பு எப்படி துண்டிக்கலாம் என்று ஏழுமலை வாசனிடம் தகராறு செய்தாராம். அப்போது ஆத்திரமடைந்த இசக்கி ராஜா, ஏழுமலைவாசனைசரமாரியாககத்தியால்குத்தினாராம். இதில் ரத்த வெள்ளத்தில் சாய்ந்த அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டு திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதனைசெய்தடாக்டர்அவர்ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து திருச்செந்தூர் கோவில் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிந்து, இசக்கி ராஜாவை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்திற்கு வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

## ஐயப்ப பக்தர்கள் சென்ற வேன் கவிழ்ந்து 2 பேர் பலி -13 பேர் காயம்!

சிவகிரி, ஜன.18

சிவகிரி அருகே அதிகாலையில் ஐயப்ப பக்தர்கள் சென்ற வேன் கவிழ்ந்து இருவர் பலி 13 பேர் சிறுசிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

தென்காசி மாவட்டம் சிவகிரி அருகே ஐயப்ப பக்தர்கள் சாமி தரிசனம் முடித்துவிட்டு குற்றாலத்தில் பொருட்கள் வாங்கிக்கொண்டு பழனி செல்வதற்காக டூரிஸ்ட் மகேந்திரா வில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக தென்காசி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சிவகிரி அருகே தொட்டிச்சிமலை ஆற்றுப் பாலத்திற்கு வடக்கே தென்பால் கண்மாய் முன்பாக அதிகாலையில் வந்த போது எதிரே வந்த கார் ஒன்று ஏறி வந்ததில் நிலை தடுமாறிய வேன் சாலையில் கவிழ்ந்தது. இதில் வாகனத்தை ஓட்டி வந்த சென்னை துர்காதேவி நகர் கொருக்குப்பேட்டை கதிர்வேல் மகன் குருமூர்த்தி (33) அதிர்ச்சியில் இறந்து போனார். இவருடைய உடன் பிறந்த சகோதரர் அண்ணன் சத்தியமூர்த்தி வயது (34) சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். வேனில் இருந்த மற்ற நபர்கள் 15 பேர் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். முனுசாமி மகன் சூர்யா (18), குருமூர்த்தி மகன் ஹரிஹரன் (13), உதர்சன் (7), மகள் தீசிகா (4), கதிர்வேல் மகன் ராமமூர்த்தி(26), பெருமாள் மகன் பிரசாந்த் (18), முனுசாமி மகன் பிரவீன் குமார் (11), கவீன் மகன் பிரவீன் (14), பார்த்தசாரதி மகன் மணி (37), துரை மகன் வசந்தகுமார் (37), ஜெயராமன் மகன் மணி (40), செல்வம் மகன் கவியரசன் (36), கவியரசன் மகன் சபரிவாசன் (12) ஆகியோர் பயணம் செய்து காயமடைந்து சிவகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் சென்னை தண்டையார்பேட்டை பவர்ஹவுஸ் பகுதியில் இருந்து கடந்த 13 ந்தேதியன்று சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்தனர். காலை 9 மணியளவில் புறப்பட்டு குற்றாலம் வந்து வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிவிட்டு இன்று அதிகாலை 2 மணியளவில் குற்றாலத்தில் இருந்து கிளம்பி பழனி செல்லும் போது விபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## தாழம்பட்டு புளு ஸ்டார்-ன் முதலாம் ஆண்டு கிரிக்கெட் திருவிழா!

கடலூர், ஜன.18

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே தாழம்பட்டு கிராமத்தில் அஜித்குமார் தமிழ்மாறன் நினைவாக தாழம்பட்டு புளு ஸ்டார்–ன் முதலாம் ஆண்டு கிரிக்கெட் திருவிழா 11 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று ஜனவரி 15 நிறைவு பெற்றது.

வெற்றி பெற்ற அணியினருக்கு முதல் ஐந்து பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டாம் பரிசு பெற்ற அணியினருக்கு பண்ருட்டி ஒன்றிய செயலாளர் (BSP) கிஷோர் என்கிற பாய் ரூபாய் இருபது ஆயிரம் பணம் பரிசு வழங்கினார்.

கிரிக்கெட் அணியினருக்கு வழக்கறிஞர் தணிகைச் செல்வன் சீருடை அன்பளிப்பு வழங்கி சிறப்பித்தார். உணவு மற்றும் தண்ணீர் ஆம்ஸ்ட்ராங் தம்பிகள் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வில் ஏராளமான கிரிக்கெட் அணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## கோலபோட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கிய நல்லதம்பி எம்.எல்.ஏ.!

திருப்பத்தூர்.ஜன.18

திருப்பத்தூர் மாவட்டம் திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு. திருப்பத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் நடைபெற்ற மகளிருக்கான கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்பு செய்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மக்கள் சேவகர் மாண்புமிகு நல்லதம்பி அவர்கள் கிராம மக்களுடன் திராவிட பொங்கல் விழாவை கொண்டாடினர்.

இவ்விழாவில் தொழிலதிபர் ராஜா ராணி தாமோதரன். திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் ராஜேந்திரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தசரதன் கவுன்சிலர் காந்தி. மற்றும் தலைவர்கள் துணைத் தலைவர்கள். கழகம் முன்னோடிகள்.கிளைக் கழக.நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தாய்மார்கள் இளைஞர்கள் என ஏராளமான கலந்து கொண்டு விழாவை கொண்டாடினர்.



தூத்துக்குடியில் பொங்கல் திருநாளையொட்டி அமைச்சர் கீதாஜீவன் கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முன்னாள் முதல்வர் கலைஞரின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து கொடியேற்றி வைத்தார்.

## மேல்மருவத்தூர் ஆன்மீக இயக்கம் சார்பில் 41-ம் ஆண்டு பொங்கல் சமுதாயப்பணி!



தூத்துக்குடி ஜன .18

தூத்துக்குடி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மேல்மருவத்தூர் ஆன்மீக குரு பங்காரு அம்மா அருளாசியுடன் 41ம் ஆண்டு பொங்கல் சமுதாயப்பணி ஆன்மீக இயக்கம் சார்பில் நடைபெற்றது. தூத்துக்குடி 3ம் மைல் திருவிக நகர் சக்தி பீடத்தில் விவசாயம் செழிக்க வேண்டி 1008 குங்கும அர்ச்சனை செய்து சிறப்பு வழிபாடு மற்றும் குரு பீடத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பூஜையை ஆன்மீக இயக்க தலைமை ஒருங்கினைப்பாளர் சக்தி முருகன் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பிரையண்ட் நகர் நேசக்கரங்கள் இல்லம், ஹில் சேரிட்டி முதியோர் இல்லம், சின்னக்கண்ணுபுரம் லூசியா மாற்றுத்திறனாளிகள் இல்லம், லூசியா பார்வையற்றோர் குடியிருப்பு, கூட்டாம் புளி அன்பு உள்ளங்கள், ராஜீவ்நகர் அன்னை கருணை இல்லம், கதிர்வேல் நகர் ஆன்மாவின் உள்ளங்கள், பாசக்கரங்கள் முதியோர் இல்லம், பால்பாண்டி நகர் நியு நேசக்கரங்கள், ஆரோக்கியபுரம் தொழுநோய் இல்லம், கீழ அழகாபுரி பார்வையற்ற பெண்கள் இல்லம், ட்ரூத்புல் மனநல காப்பகம், மெர்சி பார்வையற்றோர்இல்லம்,நரிக்குறவர்குடியிருப்புகள் மற்றும் தெருவோர ஏழை மக்கள் உள்ளிட்ட 1,200 பேருக்கு பொங்கல், கரும்பு, பனங்கிழங்கு மற்றும் 25 பேருக்கு புத்தாடைகள், வேஷ்டி சேலைகள், போர்வைகள் வழங்கப்பட்டுத. நிகழ்ச்சியில், கூட்டுறவு பண்டகசாலை பொதுமேலாளர் கந்தசாமி, திருவிக நகர் சக்தி பீட துணைத் தலைவர் திருஞானம், தகவல் தொழில்நுட்ப பொறுப்பாளர் கோபிநாத், சித்த மருத்துவர் வேம்பு கிருஷ்ணன், புதிய துறைமுகம் மன்ற பொறுப்பாளர் தனபால், ஆன்மீக இளைஞர் அணி பொறுப்பாளர் பாண்டி, மகளிர் அணி நிர்வாகிகள் பத்மாவதி, பரமேஸ்வரி, காஞ்சனா, செல்வி, முத்துலெட்சுமி, வீரலெட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாள் விழா மற்றும் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, சேலம் கன்னங்குறிச்சி மூக்கனேரி மீனவர்களுக்காக, மாபெரும் பரிசல் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியினை சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்னர் போட்டிகளில் வெற்றி பெற்ற மீனவர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம் திம்மம்பேட்டை காவல் நிலையத்தில் காவலர்கள் அனைவரும் சேர்ந்து சமத்துவ பொங்கல் வைத்து கொண்டாடினர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக துணை கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் மற்றும் திம்மம்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் வெங்கடேசன் தலைமையில் கொண்டாடப்பட்டது காவலர்கள் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

## கிருஷ்ணகிரியில்

# முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.12 லட்சம் நலத்திட்ட உதவி!

### கலெக்டர் தினேஷ்குமார் வழங்கினார்!!

கிருஷ்ணகிரி, ஜன.18

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பாக, படைவீரர் நாள் அனுசரிப்பு தேநீர் விருந்துமாவட்டகலெக்டர்தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது.



கலெக்டர் தினேஷ்குமார் கூறும்போது:–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க பட்டு வருகிறது.

அதன்படி கடந்த 1999&ம் ஆண்டு நடந்த கார்கில் போரில் கன்னி வெடிகளை அகற்றியதற்கு சேனா மெடல் பெற்ற ஆர்னரி.கேப்டன் சென்றாயன் மற்றும் தீவிரவாதியை சுட்டு வீழ்த்தியதற்குசேனாமெடல்பெற்ற படைவீரர் நாயக்.ஜி.அசோக் ஆகியோர்களுக்கும்

மேலும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தை சேர்ந்த 8 நபர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டு, தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டது. மேலும் போரில் வீரமரணம் அடைந்த படைவீரர்களின் வீரமங்கைகளான போர்விதவையர்கள் மற்றும் போரில் ஊனமுற்றவர்கள், வீர தீர செயல்களுக்கான வீரவிருது பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் 33 நபர்களுக்கு மொத்தம் ரூ.8 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் வருடாந்திர பராமரிப்பு மானியத்தறிகான காசசோலைகள் மற்றும் 4 நபர்களுக்கு ரூ.1 லட்சம் மதிப்பில் திருமண மானியம் நிதியுதவிக்கான காசோலைகள் என மொத்தம் 47 நபர்களுக்கு ரூ.11 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் தனபால் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

## ராசிபுரத்தில்

# பாதயாத்திரை சென்ற பக்தர்களுக்கு அன்னதானம்!



ராசிபுரம்,ஜன.18

தமிழகம் முழுவதும் தை மாதம் பிறப்பில்முருகர்கோயிலுக்குமாலை அணிந்து விரதம் இருந்து பல்வேறு முருக பக்தர்கள் பாதயாத்திரை பழனிக்கு மற்றும் ஆறுபடை முருகர் கோவிலுக்கு செல்வது வழக்கம்.

அதன்படி நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் சுற்றுவட்டாரபகுதியில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் ஒவ்வொரு வருடமும் ராசிபுரம் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து மாலை அணிந்து தை மாதம் ஒன்றாம் தேதி நள்ளிரவு முதலே முருகனுக்கு சிறப்பு பூஜைகள் அபிஷேகங்கள் செய்து பாதயாத்திரையாக செல்வார்கள், அதேபோல் ஏராளமான முருக பக்தர்கள் ராசிபுரம், மற்றும் சுற்றியுள்ள அத்தனூர், பட்டணம், புதுப்பட்டி, சிங்களாந்தபுரம், மெட்டாலா, மங்களபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகனுக்கு அரோகரா கந்தனுக்கு அரோகரா என பக்தி முழக்கங்கள் எழுப்பி சென்றனர். மேலும் முருகர் வேடமடைந்தும், முருகனின் ஆண்டி கோலம் வேடமிட்டு சென்றனர்.

இவர்களுக்கு அஜித்குமார் நற்பணி இயக்கம் ராசிபுரம் நகர தலைமை இளைஞரணி சார்பில் ஐந்தாம் ஆண்டாக கூல் ட்ரிங்ஸ், பிஸ்கட், தண்ணீர் பாட்டில், பொருட்களும், மற்றும் இதேபோல் வெற்றிவேல் மேட்டுத் தெருநண்பர்கள்குழு,சிவனடியார்கள் கூட்டமைப்பு, உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் அன்னதானம், பால், பிஸ்கட், சுக்கு காபி, சுக்கு பால், மற்றும் பல்வேறு உணவுப் பொருட்களை வழங்கி சிறப்பித்தனர்.

# நொய்யல் ஆற்றை மீட்க வேண்டும் என்பது கோவை மக்களின் எண்ணம்!

### துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் பேட்டி!!

கோவை,ஜன.18–

நொய்யல்ஆற்றை மீட்க வேண்டும் என்பதுகோவை மக்களின் எண்ணமாக இருக்கிறது என்று துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் கோவை விமானம் வந்தார். அப்போதுஅவருக்கு அமைச்சர் முத்துசாமி, மாவட்ட கலெக்டர் பவன்குமார்,மாநகராட்சி ஆணையாளர்சிவகுருபிரபாகரன்,மாநகரபோலீஸ் கமிஷனர்கண்ணன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர், பின்னர் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம்கூறியதாவது;

பொங்கல்திருநாள்என்பதுவிவசாய பெருமக்கள்அறுவடைமுடிந்துஆனந்தமாகஇல்லங்களில்மட்டுமல்லாமல் ஊரேகூடிமகிழ்ந்திருப்பதுஇதில்எந்த பேதத்திற்கும்இடமில்லை, சூரியனை வழிபடும்நாளாக அதுஅமைந்தாலும், இயற்கை தந்த வரல்களுக்கெல்லாம் நன்றிசொல்கின்றதமிழ் விழாவாக அது அமைந்துள்ளது, உலகெங்கும் உள்ளதமிழ் மக்கள்அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துகள்.

மேலும் பிற பகுதிகளில் வாழக்கூடிய விவசாய பெருமக்களுக்குசங்கராந்தி வாழ்த்துக்கள். நொய்யல் ஆற்றை மீட்க வேண்டும். புதுப்பிக்க வேண்டும்என்பது தான் இந்த பகுதி மக்களின்எண்ணமாக இருக்கிறது. நொய்யல்ஆற்றை மீட்பதுஎன்பது தஞ்சைவிவசாய மக்களுக்குநாம்செய்யக்கூடியமிகப்பெரிய பேராகஅமையும் இவ்வாறு அவர்கூறினார்.

# பைக் மீது வாகனம் மோதி முதியவர் பலி!

புளியம்பட்டி,ஜன.18

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி பவானிசாகர் சாலையில் கலைஞர் நகர் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற சாலை விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியது.

புளியம்பட்டி கலைஞர் நகரை சேர்ந்த ரங்கன் (60) என்பவர், இன்று இரவு 9 மணி அளவில் தனது வீட்டிலிருந்து எதிரே உள்ள மளிகை கடைக்கு சென்று பொருட்கள் வாங்கிவிட்டு சாலையை கடந்து சென்றபோது, அவ்வழியே அதிவேகமாக வந்த பல்சர் இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானார். இந்த விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த ரங்கனை, உடனடியாக தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை பவானிசாகரை சேர்ந்த ஜெயசூர்யா (23) என்பவர் ஓட்டி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் முதியவர் உயிரிழந்ததை தொடர்ந்து, அவரது குடும்பத்தினர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் சுமார் 40 பேர், சம்பவ இடத்தில் வேகத்தடை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி, சுமார் 10 நிமிடங்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த புளியம்பட்டி பொறுப்பு காவல் ஆய்வாளர் சரஸ்வதி மற்றும் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன்ஆகியோர்பொதுமக்களிடம்பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தற்காலிகமாக பேரிகார்டு அமைக்கப்படும் என்றும் உறுதியளித்ததை தொடர்ந்து, பொதுமக்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இதுகுறித்து புளியம்பட்டி காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேவராயபுரம் அரசு பள்ளியில்

# பொன்விழா ஆலோசனை கூட்டம்!

கோவை, ஜன.18

கோவை தொண்டாமுத்தூர் அருகே தேவராயபுரம் அரசு உயர்நிலை பள்ளி கடந்த 1975ம் ஆண்டு நடுநிலைப்பள்ளியாக இருந்து உயர்நி லை பள்ளி யாக தரம் உய ர்த்த ப்ப ட்டது. அதன் பொ ன்விழா மு ன்னாள் மா ண வர்கள் அமை ப்பால் சிறப்பாக கொ ண்ட ப்படவுள்ளது. இதற்கானஆலோசனைக்கூட்டம்பள்ளியில்நடைபெற்றது. இதில் பொன்விழாவையொட்டி சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பில் சுற்று சுவர் சீரமைத்தல், குடிநீர் வசதி மேம்படுத்தல், பொன் விழா நுழைவு வாயில் அமைத்தல், கழிப்பறை புதுப்பித்தல், மாணவர்கள் கல்வி தரம் மேம்பட ஸ்மாட் வகுப்பறைஅமைத்தல், டிஜிட்டல் லைப்ரரி, இறுதி தேர்வு வினா விடை தொகுப்பு வழங்கல், தன்னம்பிக்கைபயிரவரங்குநடத்துதல்குறித்துஆலோசனை செய்யப்பட்டது. தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. வாரம் தோறும் பொன்விழா ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது. பொன்விழா கொண்டாட்டங்களில் முன்னாள் மாணவ, மாணவியர் அனைவரும் பங்குபெறுமாறு முன்னாள் மா ணவரும்,பொன்விழா ஒருங்கி ணை ப்பா ளருமான சிவச ண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.



# மடத்துக்குளம் அருகே கணபதி ஹோமம்!

உடுமலை,ஜன.18

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள மடத்துக்குளம் வட்டம் கழுகரை கணபதி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மகா கணபதி மற்றும் ஸ்ரீ ராகு ஸ்ரீ கேது மூஷிக வாகனன் சிறப்பு கணபதி ஹோம விழா நடந்தது. கிராம மக்கள் நலனுக்காகவும் மழை பெய்யவும் அனைவரும் சுபிட்சமாக இருக்கவும் தைத்திருநாள் அன்று காலை 10 மணிக்கு மகா கணபதி ஹோமம் தொடர்ந்து உச்சிக்கால பூஜையும் நடந்தது. அதை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது .



இதில் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கணபதியை வழிபட்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணபதி நகர் பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

## சங்கராபுரம் அருகே

# ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமத்துவ பொங்கல் விழா!

கள்ளக்குறிச்சி,ஜன.18

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள சோழம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சமத்துவ பொங்கல் விழா உற்சாகமாக கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு மருத்துவமனை முன்பாக மஞ்சள் தோரணங்கள்கட்டப்பட்டு, கரும்புகள்அலங்கரித்து வைக்கப்பட்டன. பச்சரிசியில் சக்கரை பொங்கல் தயாரித்து, பொங்கலோ பொங்கல் என முழங்கியபடி ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

சமத்துவ பொங்கல் விழாவில் மருத்துவர்கள் சம்பத்குமார், பார்த்தசாரதி, சுகன்யா, இலக்கியா ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் மருத்துவ பணியாளர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, சாதி, மத, இன வேறுபாடுகளை மறந்து சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் விழாவை சிறப்பாக கொண்டாடினர்.



கோவை மலுமிச்சம்பட்டி ஊராட்சி அதன் சுற்றியுள்ள பகுதிகளில் 2.5 கோடி செலவில் தார்சாலை அமைத்தல் மற்றும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். அருகில் முன்னாள் ஒன்றிய குழுஉறுப்பினர்மாசிலாமணி,முன்னால்மலுமிச்சம்பட்டிஊராட்சிமன்றதுணைத்தலைவர் சிவராஜ், செயலாளர்கள் சண்முக வேலாயுதம், விக்னேஷ், ஊராட்சி செயலர் கார்த்திகேயன்,வார்டு உறுப்பினர்கள் மணிகுட்டி, சித்ரா, மருதாசலம் ,குமாரசாமி, சிவகுமார், பாலசுப்பிரமணியம், ஆறுச்சாமி பலர் கலந்து கொண்டனர்.



மணியக்காரன் பாளையத்தில் சமத்துவ பொங்கல் விழாவில் கோலப்போட்டிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் முன்னாள் மேயர் கல்பனா ஆனந்தகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆனந்தகுமார், மாநகர் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஜோதி, வார்டு அவைத் தலைவர் அருணாச்சலம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினர்.




கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை 50 –வது ஆண்டு பொன்விழாவில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.



## உடுமலை அருகே

# திருமூர்த்தி மலையில் சுற்றுலா பொங்கல் விழா!

உடுமலை,ஜன.18

தமிழ்நாடு அரசு சுற்றுலா துறை சார்பாக ஒவ்வொரு வருடமும் பொங்கல் விழா நடத்தப்படுகிறது.

இந்த வருடம்திருப்பூர்மாவட்டசுற்றுலாத்துறை சார்பில்திருமூர்த்தி மலை சுற்றுலாத்தலத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோவிலில் சுற்றுலா பொங்கல் விழா நடத்த திட்டமிடப்பட்டது.

பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி அவர்கள் சுற்றுலா பொங்கல் விழாவிற்குதலைமைதாங்கினார்.

கலை நிகழ்ச்சிகளுடன் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு கலைஞர்களைஉற்சாகப்படுத்தினார். தப்பாட்டம் ,துடுப்பாட்டம் பறையாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.அமணலிங்கேஸ்வரர் கோவிலில் பொங்கல் வைக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் அனைவரும் கலந்து கொண்டனர். வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்க தப்பாட்டம் ,பறையாட்டம், துடுப்பாட்டம், வள்ளி கும்மி ஆட்டம் போன்றவை நடத்தப்பட்டன. பல்வேறு கலைஞர்கள் பங்கேற்று பொது மக்களை மகிழ்வித்தனர்.

மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த குமார்அவர்கள்வரவேற்புஉரை ஆற்றினார்.

பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சுவாமி அவர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

விழாவில் கோவில் அறங்காவலர் குழு தலைவர் ரவி, கோவில் அறங்காவலர்கள், செயல் அலுவலர் அமரநாதன், தளி பேரூராட்சி மன்ற தலைவர் உதயகுமார்,மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சாமி, உடுமலை மத்திய ஒன்றிய செயலாளர் செந்தில்குமார்,பொது குழு உறுப்பினர் பாபு, மகளிர் அணி அமைப்பாளர் அனிதா மற்றும் கழக நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.